செய்தி வெளியீடு எண்:008 நாள்: 06.01.2020

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (6.1.2020) தலைமைச் செயலகத்தில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் அரியலூர் மாவட்டம், அரியலூரில் 7 கோடியே 35 லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட காவல் அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 28 கோடியே 77 லட்சத்து 52 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 50 காவலர் குடியிருப்புகள், 7 காவல் நிலையங்கள், 5 காவல்துறை இதர கட்டடங்கள், 3 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினருக்கான 55 குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், அரியலூர் மாவட்டம், அரியலூரில் தூண் தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 45,342 சதுர அடி பரப்பளவில், 7 கோடியே 35 லட்சத்து 19 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட காவல் அலுவலகக் கட்டடத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இப்புதிய மாவட்ட காவல் அலுவலகக் கட்டடம், காவல் கண்காணிப்பாளர் அறை, பணியாளர்களுக்கான அறைகள், மின்தூக்கி, ஜென்செட், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள், பணியாளர்களின் குழந்தைகளுக்கான காப்பகம், மழைநீர் சேகரிப்பு வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத்தில் 3 கோடியே 51 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 23 காவலர் குடியிருப்புகள், கடலூர் மாவட்டம், மங்கலம்பேட்டையில் 3 கோடியே 3 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 19 காவலர் குடியிருப்புகள், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – துவாக்குடியில் 1 கோடியே 19 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 காவலர் குடியிருப்புகள், என 7 கோடியே 74 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 50 காவலர் குடியிருப்புகள்;

சென்னை மாவட்டம் – எண்ணூர் அனைத்து மகளிர் காவல் நிலையம், ஆவடி டேங்க் பேக்டரி, சேத்துபட்டு, பட்டாபிராம், கோடம்பாக்கம் மற்றும் எண்ணூர், வேலூர் மாவட்டம் – விருதம்பட்டு ஆகிய இடங்களில் 7 கோடியே 80 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 காவல் நிலையங்கள்;

சென்னை மாவட்டம், புனித தோமையார் மலையில் உள்ள ஆயுதப்படை வளாகத்தில் 69 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு பள்ளியுடன் கூடிய குழந்தைகள் காப்பகம்; ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலத்தில் 54 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு; சேலம் மாவட்டம் – சங்ககிரியில் 54 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு; மதுரை மாவட்டம் – மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டம் – சிவகங்கை ஆகிய இடங்களில் 1 கோடியே 63 லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள க்யூ பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகக் கட்டடங்கள், என 3 கோடியே 42 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 இதர கட்டடங்கள்;

சேலம் மாவட்டம் – சூரமங்கலம், திருநெல்வேலி மாவட்டம் – திசையன்விளை, விருதுநகர் மாவட்டம் – சிவகாசி ஆகிய இடங்களில் 3 கோடியே 47 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள்;

தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டியில் 1 கோடியே 57 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினருக்கான 16 குடியிருப்புகள் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் – கே. சாத்தனூரில் 4 கோடியே 74 லட்சத்து 93 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினருக்கான 39 குடியிருப்புகள்;

என மொத்தம், 36 கோடியே 12 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், அரசு தலைமைக் கொறடா திரு.எஸ்.ராஜேந்திரன், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. J.K. திரிபாதி, இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் முனைவர் சி. சைலேந்திர பாபு, இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் முனைவர் அ.கா. விஸ்வநாதன், இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.ம.நா.மஞ்சுநாதா, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**